**செய்தி வெளியீடு எண்: 138** **நாள்: 21.02.2012**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் பணிபுரியும் மருத்துவ அலுவலர்கள் / மருத்துவம் சாரா பணியாளர்கள் / அமைச்சுப் பணியாளர்களை கலந்தாய்வு மூலம் இடமாற்றம் செய்வதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் 20.11.2007–ம் நாளிட்ட மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் அரசாணை (2டி) எண்.131–ல் வழங்கப்பட்டுள்ளது. இவ்வழிகாட்டு நெறிமுறைகளின்படி இடமாற்றம் செய்வதற்கான கலந்தாய்வு நடைபெற்று வருகிறது. தற்பொழுது, இவ்வாண்டுக்கான பணி இடமாற்றம் செய்வதற்கான கலந்தாய்வுக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மற்றும் மே, 2012 மாதங்களில் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் உள்ள அனைத்து இயக்ககங்களின் துறைத் தலைவர்களுக்கும் இதுதொடர்பாக ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. பணியிடமாற்ற கலந்தாய்வுக் கூட்டம் கீழ்க்காணும் அட்டவணைப்படி நடைபெறும்:

| | | | |
|---|---|---|---|
| 1. | மருத்துவக் கல்வி இயக்ககம் | : | மார்ச்–2012, முதல் வாரம் |
| 2. | மருத்துவம் மற்றும் ஊர கநலப் பணிகள் இயக்ககம் | : | மே–2012, இரண்டாவது வாரம் |
| 3. | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்ககம் | : | மே–2012, மூன்றாவது வாரம் |
| 4. | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் வரும் இதர இயக்ககங்கள் | : | மே–2012, நான்காவது வாரம் |

2. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் வரும் அனைத்துத் துறை தலைவர்களும், மேற்காணும் இடமாற்ற கலந்தாய்வுக்கு முன் எவ்வித இடமாற்றமும் அதற்கான பணி நியமன ஆணைகளும் வழங்கக்கூடாது என்று ஆணையிடப்பட்டுள்ளது.

**ம.ந.(ம) கு.ந.(ஏ) துறை**

——————

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**